பயணத்தின்போது குறிப்பு எடுத்துக்கொண்டு, என்னுடைய துறைக்கு அனுப்பினார்கள். எனவே, இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தளவிற்கு, அதிகமான நிதி ஒதுக்கப்பட்டு அந்த மாவட்டத்தில் சாலைகளை விரிவுபடுத்துகிற பணிகளில் நாங்கள் ஈடுபட இருக்கிறோம். அந்த நிலையிலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை குறித்து, கடிதம் மூலமாக என்னிடத்திலே கொடுப்பாரேயானால், அதை அலசிப் பார்த்து, ஆராய்ந்து எதை, எதையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**193—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***15586—திரு. வே. சம்பத்குமார்:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரூர் தொகுதி, கம்பைநல்லூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அரூர் தொகுதி, கம்பைநல்லூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் எதுவுமில்லை. எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இப்போது வாய்ப்பு இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

**திரு. வே. சம்பத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா, தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர்கள் அண்ணன்*

*2022 ஏப்ரல் 28]*

*எடப்பாடியார், அண்ணன்* OPS, *தருமபுரி மாவட்டக் கழக செயலாளராக இருபதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஆகியோரை வணங்குகிறேன். அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கம்பைநல்லூர் பேரூராட்சியில் 15* wards *இருக்கின்றன. அந்த 15* wards*–ல் 14,500–க்கு மேற்பட்ட பொதுமக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 4,500–க்கு மேற்பட்ட வீடுகளில் ஒரே வீட்டில், 2 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அங்கே வெதரம்பட்டி பாமண்டப்பட்டி என்ற ஊரில்* survey number *91–ல் அரசுக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித்தர முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடமிருந்தால், அங்கே இருக்கிற அவசியத்தைப் பொறுத்து, ஆய்வு செய்து, உடனடியாகப் பணியை நாம் துவக்க முடியும். அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் என்று நாம் சொல்கிறபோது, அரசாங்கம் மற்ற பணிகளுக்காக அதை வைத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதைவிட மிக முக்கியமான பணிகளுக்காக அந்த இடம் வைக்கப்பட்டிருக்கலாம். எனவே, அதையெல்லாம் யோசித்துத்தான் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். முதற்கட்டமாக, அங்கே இருக்கிற தேவையை ஆய்வு செய்ய வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

**திரு. வே. சம்பத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கடந்த வாரம் ஒரு துணைக் கேள்வி கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் இதே பதிலைச் சொல்லியிருந்தார். அது வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் இல்லை. அரசினுடைய இடம். ஆகவே, மறுபரிசீலனை செய்து அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல,*

அரூர், அம்பேத்கர் நகரில், ஏற்கெனவே தொடங்கப்பட்ட 1,836 அடுக்குமாடிக் குடியிருப்பில் 904 வீடுகள் கட்டும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதிகாரிகளிடம் கேட்டால், இன்னும் சுற்றுச்சூழல் துறையிடமிருந்து NOC வரவில்லை என்று சொல்கிறார்கள். அதையும் ஆய்வு செய்து, அதைத் துவங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல தருமபுரி மாவட்டத்தில் இதுவரையில் குடிசை மாற்று வாரிய அலுவலகம் இல்லை. அது ஒசூரில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைப் பிரித்து தருமபுரி மாவட்டத்திற்கு என்று தனியாக ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், அரசினுடைய நிலத்தைக் கேட்கலாம். ஆனால், நாம் அதைக் கேட்பதற்கு முன்னால் அங்கே என்ன அவசியம் இருக்கிறது, முதலில் நாம் building கட்டினால் அது விற்பனையாகுமா என்பதை ஆய்வு செய்த பின்னால்தான் நடவடிக்கை எடுக்க முடியும். நீங்கள் கேட்ட இன்னொரு கேள்விக்குப் பதில், அது நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினுடைய சார்பாகச் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அதுகுறித்து தனியாகக் கேள்வி கேட்டால், அதற்கு சரியான பதில் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.

**திரு. கே.ஆர். ஜெயராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், எனது சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட உப்பிலிபாளையம் கிராமம், உழவர் சந்தை பின்புறம் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட 960 அடுக்குமாடிக் குடியிருப்புகள், கட்டி 33 ஆண்டுகள் முடிந்துவிட்டதால், மிகவும் சிதிலமடைந்து, வசிக்க தகுதியற்றதாகவும் அங்கே குடியிருக்கும் மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியதாகவும் உள்ளன. இதில் உயிருக்குப் பயந்து சுமார் 400–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருப்புகளை காலி செய்துவிட்டு சென்றுவிட்டனர். ஆபத்தான நிலையில்

*2022 ஏப்ரல் 28]*

*இருக்கும் குடியிருப்புகளை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களே நேரில் ஆய்வு செய்துள்ளீர்கள். ஆனால் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில், தங்கள் பதிலுரையில் இம்மாதிரியான சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை குடியிருப்போர் நலச் சங்க நிருவாகமே தனியார் கட்டுமான நிறுவனத்தோடு பேசி முடிவு செய்துகொள்ள வேண்டுமென்று கூறியுள்ளீர்கள். இந்தப் பதில் ஏற்புடையதாக இல்லை. இங்கு வசிக்கும் 612 குடும்பங்கள் குறைந்த வருவாய்ப் பிரிவினராகவும், 300 குடும்பங்கள் மத்திய வருவாய்ப் பிரிவினராகவும்,. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கேள்வி, என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்.*

*முற்பகல் 10–25*

**திரு. கே.ஆர். ஜெயராம்:** *இதோ கேள்விக்கு வந்துவிட்டேன். எஞ்சியுள்ள 48 குடும்பங்கள் மட்டுமே உயர் வருவாய்ப் பிரிவில் உள்ளனர். இதில் 15 விழுக்காடான, 136 வீடுகள், வீட்டு வசதி வாரியத்திடமே உள்ளன. கடந்த 14–4–2022 அன்று மத்திய வருவாய்ப் பிரிவு குடியிருப்பில் குடியிருக்கும் சுப்புலட்சுமி என்பவர்மீது மேற்கூரை விழுந்து. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்விக்கு ஒரு வாய்ப்பு தரப்படும். நீங்கள் இதனை பிரதான கேள்வியாகக் கேட்டீர்களென்றால், நீங்கள் சொல்லக்கூடிய சர்வே எண் போன்ற இவற்றிற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி ஞாபகம் வைத்திருந்து பதில் சொல்ல முடியும்? மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

**திரு. கே.ஆர். ஜெயராம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடியிருக்கும் சுப்புலட்சுமி என்பவர்மீது மேற்கூரை இடிந்து விழுந்து படுகாயமடைந்தார். அவரை அரசு மருத்துவமனையில் நானும் சென்று பார்த்து உதவி செய்துவிட்டு வந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகளிடம் விசாரித்ததாக அறிய வருகிறேன். இவ்வாறான சூழ்நிலையில், ஏழையெளிய மக்களின் நலன் கருதி, வாரியம் இலாப நோக்கம் எதிர்பார்க்காமல், வீட்டு வசதி வாரியமே வீடுகளைக் கட்டித் தர முன்வர வேண்டுமென*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூரில் 960 வீடுகள் மிக மோசமாக பழுதடைந்திருக்கின்றன. நீண்ட காலமாக அந்தச் சூழ்நிலை இருக்கிறது. 1 மாதம், 2 மாதம் அல்ல, பல ஆண்டுகளாக அந்த நிலைமை இருக்கிறது. அதனை முன்பே செய்திருக்க வேண்டும். ஆனால், அதில் சில சட்டத் திருத்தங்கள் கொண்டுவர வேண்டிய அவசியம் இருந்த காரணத்தால், அவை தற்போது கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அவர் சொல்கிறபோது ஒரு கருத்தைச் சொன்னார். தனியார் கட்டுமான நிறுவனங்களோடு அங்கே இருக்கிற குடியிருப்போர் நலச் சங்கமே பேசி முடிவு செய்ய வேண்டும் என்று நான் சொன்ன கருத்தை, அவர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக என்னென்ன பணிகளைச் செய்து கொடுக்க வேண்டுமோ–காரணம் அங்கே* road *இருக்கிறது, அது ஏற்கெனவே உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.* OSR land *இருக்கிறது. எனவே, இதையெல்லாம் எடுத்து, அதிலேயும்* FSI *கிடைக்கிற அளவிற்குச் செய்தால்தான் அது வெற்றிகரமாக நடக்கும். அவற்றையெல்லாம் வீட்டு வசதி வாரியம் முன்னின்று செய்யவும் தயாராக இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் கட்டுமான நிறுவனத்தை வீட்டு வசதி வாரியம் தேர்ந்தெடுத்தால், நிச்சயமாக அவர்களுக்கு ஒரு மாறுபட்ட கருத்து இருக்கும். அதன் காரணத்தால்தான் சிறந்த கட்டுமான நிறுவனம் எவை எவை என்பதை அறிவதற்கு, 10 கட்டுமான நிறுவனங்களைப் பட்டியலிட்டு அவர்களிடத்திலே கொடுத்துவிட்டால், அதிலிருந்து எதை வேண்டுமானாலும் அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அங்கே குடியிருப்பவர்களுக்கு திருப்திகரமாக நடக்க வேண்டும். அதில் வாரியம் முழுமையான பொறுப்பை எடுத்துக்கொண்டது அல்லது அவர்கள்* dominate *செய்து விட்டார்கள் என்ற நிலை வரக்கூடாது. எனவே, வாரியத்தைப் பொறுத்தவரை, துணையாக இருக்கும். இதுபோல 6 இடங்களில் கட்டுவதற்காக ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். அன்றைக்கு நீங்கள் பேசுவதாக இருந்தது.*

*2022 ஏப்ரல் 28]*

*அன்றைக்கு நீங்கள் பேசியிருந்தால், முழுமையாக விளக்கங்கள் கிடைத்திருக்கும். அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எனவே, நிச்சயமாக தொடர்ந்து இதுபோல் வரக்கூடியவர்களுக்கு உதவியாக இருந்து, வாரியம் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

**திரு. கோ. ஐயப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடலூர் தொகுதியில் செம்மண்டலம், குண்டு சாலை, தேவனாம்பட்டினம் போன்ற பகுதிகளிலே 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் சிதிலமடைந்து, யாரும் குடியிருக்க முடியாத சூழ்நிலை உள்ளது. நகரின் மத்திய பகுதியில் அமைந்துள்ள அந்தக் குடியிருப்புகளை இடித்து, சிதிலமடைந்திருக்கின்ற அந்தக் கட்டடங்களை புதிய கட்டடங்களாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விதமான கட்டடங்கள் இருக்கின்றன. ஒன்று சுயநிதி திட்டத்தின் மூலமாகக் கட்டி, இப்போது சிங்காநல்லூர் குறித்து சொன்னதைப்போன்று வீட்டு வசதி வாரியம் அவர்களுக்கு ஒப்படைத்துவிட்டது; விற்கப்பட்டுவிட்டது. எனவே, அவர்களும் ஒன்று சேர்ந்து செய்ய முடியாத நிலையில், அதனைச் செய்து கொடுப்போம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இன்னொன்று வாடகைக் கட்டடங்கள்–*rental quarters*. அவையும் ஏறத்தாழ இதேமாதிரி பழுதடைந்திருக்கின்றன. 138 இடங்களில்* rental quarters *இருக்கின்றன. அதில் ஒரு 60 இடங்கள், மிக மோசமாக இருக்கின்றன. அவற்றை இடிப்பதற்கான உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 60 இடங்களிலேயும் புதிய முறைகளை,* methods–*ஐ நாம் கடைப்பிடித்து, 60 இடங்களிலேயும் உடனடியாகக் கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். காரணம், அரசாங்கம் அதன் நிதியை*

வைத்து, ஆண்டுக்கு இரண்டு, மூன்று கட்டடங்கள் என்றுதான் கட்ட முடியும். எனவே, joint venture என்ற முறையிலே குறுகிய காலத்தில், ஒரு மூன்றாண்டு காலத்திற்குள் தேவையான அந்த இடத்தில் முழுமையாகக் கட்டிவிடலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறோம். எனவே, எப்படியிருந்தாலும் அவர்கள் சொன்னது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**194—**

## இணையவழி விற்பனை

*2755—**திருமதி வானதி சீனிவாசன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை இணையவழிமூலம் விற்பனை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை ஆன்லைன்மூலம் விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இயங்கும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் தங்கள் இணையதளத்தில் பதிவேற்றுவதற்கு முன்னணி மின்னணு வர்த்தக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த கூட்டு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.*

*மகளிர் சுய உதவிக் குழுக்களின் 69 தயாரிப்புகள் ஏற்கெனவே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.*